# புழுக்கடியின் வாசம்

அலறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R17529

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17529
894.8111

# பூமிக்கடியில் வானம்

அலறி

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

உசாத்துணைப் பகுதி

MESRO

'மெஸ்றோ' பப்ளிகேஷன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவுப் பதிவு எண் 17529
வகுப்பு எண் 894.8111

பூமிக்கடியில் வானம்
(கவிதைகள்)
அலறி
(அ.ல. முஹம்மது றிபாஸ்)
பதிப்புரிமை- ஆசிரியர்
முதற் பதிப்பு- மார்கழி, 2005
பக்கங்கள்- 55
வெளியீடு- 'மெஸ்றோ' பப்ளிகேஷன், கல்முனை
புத்தக வடிவமைப்பு- 'நிறம்', அக்கரைப்பற்று, +94773052317
அட்டை வடிவமைப்பு- றஷ்மி
அச்சமைப்பு- செலக்சன், அக்கரைப்பற்று
விலை- 100.00

**POOMIKKADEYIL VAANAM**
(poems)
Alri
(A.L. Mohamed Rifas)
Copy right- Author
First edition- December, 2005
Pages- 55
Published by- 'MESRO' publication, Kalmunai
Book designed- 'niram', Akkaraipattu, +94773052317
Jacket designed by- rashmy
Printed by- Selection Printers, Akkaraipattu
Prize- Rs. 100.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பா -

அலியார் அப்துல் லத்தீப்

உம்மா -

மரைக்கார்தம்பி மதீனா உம்மா

மாமா -

மன்சூர் வைத்தியர்

என் பஹ்மியா

நால்வருக்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலட்டுக் கவிஞனின் கவிதையும் கிழட்டுக் 'கோ'வின் சாணமும்

நண்பர் அலறி என் மனதுக்கு மிகவும் வேண்டியவர். அவரது அடக்கமானதனமும், அழகான சிரிப்பும் என்னைக் கவர்வன. ஒருநாள் தான் எழுதிய கவிதைகள் சிலதைக் கொண்டுதந்து இவைகளைப் படித்துப் பார்த்துவிட்டு எதையாவது எழுதித்தாருங்கள் என்று வேண்டினார். கவிதைகளைப் படிக்காமலே இக் கவிதைகள் மிக அற்புதமானவை என்று எழுத நானொரு கலாநிதியும் இல்லை. பேராசிரியனும் அல்ல. அலறியைப் போன்றே நானுமொரு சிறு ஆறு. கவிதையின் சகல எல்லைகளையும் நான் கடந்திருக்கிறேனா என்பது எனக்கு எந்த அளவுக்குத் தெரியாமல் இருக்கிறதோ, அந்த அளவுக்கு அலறி அதன் எல்லைகளைத் தொட்டிருக்கிறாரா என்பதுவும் எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிவதெல்லாம் கவிதை என்று நினைத்து எதையோ எழுதுவதுதான். தமது 'நீயத்து' சரியாக இருந்தால் அது வெற்றிகரமானதாகும். இது கவிதைக்கு மாத்திரம் பொருத்தமான ஒன்றுமல்ல. வாழ்க்கையின் எந்த ஒரு விடயத்திற்கும் சுத்தமான 'நீயத்து' முக்கியம். சுத்தமற்ற 'நீயத்து'காரனெல்லாம் சதா இந்தப் பூமியில் பட்டுத் திரிகின்ற பாடுகளை இவ்விடத்தில் சொன்னால் இந்தப் புத்தகம் கனம் குறைந்துவிடும்.

எதுவும், ஒரு கைவந்த கலையாக வரவேண்டும். அதற்கு அக்கலையோடு நாம் முற்றுமுழுதாக வாழ வேண்டும். நானும் கவிதையோடு ஓரளவுக்கு இப்படித்தான். நாம் அதனோடு வாழ வாழ அது தனது உள்ளத்தை, உடலை, உடம்பிலுள்ள மயிரை என்று அனைத்தையுமே அர்ப்பணித்துக் காட்டும். பாரிய கருங்கல் சுவருக்கு அப்பால் உள்ளதை அதில் எந்தத் துவாரமுமில்லாமல் அதன் மறு புறத்திலிருந்து பார்த்தேயாகுவேன் என்ற நல்ல 'நீயத்து'டன் ஒருவன் தினசரி முயன்றால் ஒருநாள் அவன் பார்ப்பான். வேலியே முழு ஓட்டையாகிவிடும். சகல சக்தியையும் இறைவன் மனிதனுக்கு வழங்கியுள்ளான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

26.12.2005

## எழுத நினைக்காத குறிப்பு

கடந்த வருடம் இத்தினத்தில் ஆழிப்பேரலையில் உயிர்நீத்த என் குடும்ப உறவுகளையும் மற்ற உயிர்களையும் ஒருகணம் நினைத்துக்கொண்டு...

பூக்களைக் காணும் மகிழ்வை என் கவிதைகள் எனக்குத் தந்தால்போதும். மந்திரக் கோலாக மாறி அற்புதங்களை அவை நிகழ்த்திவிட வேண்டுமென்று எள்ளளவும் எதிர்பார்ப்பில்லை. எனக்குள் கிளர்ந்த உணர்வுகளை என் சமூகத்தைச் சூழ்ந்துள்ள துயரங்களை கவிதையாக்க முயன்றிருக்கிறேன்.

கவிதைகள் எழுதிய காலப்பகுதியை ஒரு கொடிக்கு ஒப்பாக்கி பிரித்திருக்கிறேன். ஒருசிலதில் சிறுதிருத்தங்களும் செய்திருக்கிறேன்.

இத் தொகுதிக்கு நிதி மூலமாக இருந்தார் என்பதற்கப்பாலும் என் ஆத்ம நேசிப்புக்குரிய 'மெஸ்றோ' நிறுவனத்தின் தலைவர் எச்.எம்.எம். ஹரீஸ்,

இம் மண்ணிலும் என் மனதிலும் வாழும் கவிஞர் சோலைக்கிளி,

அன்புக்குரிய டாக்டர் எஸ். நஜிமுதீன்,

என் இலக்கியத் திண்ணைகளான-

கலைதாசன் ஹக்கீம், அம்ரிதா ஏயெம், நவாஸ் சௌபி, எம்.ஐ.எம்.றஊப், ஏ.எம்.குர்சித், றகுமான் ஏ. ஜெமீல், கரீம் மாமா, விஜிலி,

களம் தந்த-

வீ.ஜெகதீசன் (கவிதா சாகரம் - தினகரன்), பதி-யுஸ்-ஸமான் (செந்தூரம் - தினகரன்), றஊப் செய்ன் (மீள்பார்வை), அல்-மருதமுனை, எங்கள் தேசம், திண்ணை.கொம், வீரகேசரி, தினக்குரல்

அட்டை வடிவமைத்த- றஷ்மி, புத்தக வடிவமைப்பைச் செய்த - 'நிறம்'

அச்சிட்ட - செலக்ஷன் அச்சகம், அக்கரைப்பற்று

நண்பர்களான-

நௌபர் ஏ.பாவா, றியாத் ஏ. மஜீத், றிஸ்வியூ முகம்மது நபீல், பலூனா, பசீர், ஹரீஷா சமீம், றொசான் ஏ.ஜிப்ரி

என்னைப் புரிந்துகொண்ட பிரிய இணை- பஹ்மியா, தங்கை சிபானா

எல்லோருக்கும் மனம் பூத்த நன்றிகளும் அன்பும்.

அலறி

339, Mackamady Road,
Maruthamunai -03
32314
Sri Lanka.
Ph: +94 672221060

almrifas@yahoo.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர சபை
கல்முனை

கவிதையின் 'ஆட்ட ஓட்டங்களு'ம் இதுதான். அது பழகப் பழகத்தான் பல் இழிக்கும். இலக்கிய வடிவங்களில் மிகவும் திமிர் பிடித்த ஒன்று கவிதைதான். அது வலிய யாருக்கும் வாலாயமாகாது. குறிப்பாகச் சொன்னால் இதில் கொஞ்சம், அதில் கொஞ்சம் அனைத்திலுமே கொஞ்சமென்று எச்சில் கொசு மொய்த்து மொய்த்துத் திரிவதைப்போல் அலைந்து திரிகின்ற ஒருவனுக்கு மிஞ்சுவது ஏமாற்றம்தான். இதற்கு முத்து முத்தான உதாரணங்களை நான் காட்டமுடியும்.

ஈழத்தில் இன்று கவிதை வளர்ந்திருக்கிறது. எந்த அளவுக்கு என்றால் உலகத் தரத்திற்கு புதிய புதிய சிந்தனைகளும் போக்குகளுமாக அது தற்போது நடைபோடுகிறது. இது இவ்வாறு இருக்க மலட்டுக் கவிஞன் முட்டையிட்டு அதை கவிதை என்று கிழட்டுக் 'கோ' சாணமடித்தால் எடுபடாது.

அவைகளை விட அலறியின் இவைகள் சிறப்பு. அலறி ஒரு மலடனல்ல என்பதுவும் இத் தொகுப்பின் மூலம் புலனாகிறது.

எவனிலும் எரிச்சல்படாமல் வெட்டவெளிச்சமான மனதோடு கவிதையை நேசித்து அதனோடு வாழப்பழகுங்கள் அலறி. அதன் பிறகு அது உங்களின் 'புறகாலே' திரியும். நீங்கள் நில் என்று சொன்னாலும் நிற்காமல். அப்படியொரு குணம் கவிதைக்கு உண்டு.

**சோலைக்கிளி**

20.10.2005



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடி சிறு பூக்கள் அரும்பும் காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உனக்கு உள்ளே...
## எனக்கு வெளியே...

பனிப்பாறைகள் உருகும்
அன்றி
பாலை வெயில் தகிக்கும்
நாடொன்று நான்போக
நாடி பிடித்து
சம்மதம் கேட்க
கண்டங்கள் பிரிந்தால்
சமுத்திரம் பெருக்கெடுக்குமென
உன் கண்கள் சொன்னது.

காணி, கார்
மாடி, மனை
ஆடை, ஆபரணமென
ஆசை வார்த்தைகளை
அடுக்கிக் கொள்ள
இல்லிடம் இழந்தோரின்
கூடாரங்களில் விரல் நீண்டது.
ஒற்றைச் சங்கிலி போதுமென்று
கழுத்து மின்னியது.

இரண்டு வருடங்கள் காத்திரு
காலம்
மெழுகாய்க் கரையுமென
துருவப் பறவைகள்
உன்னில் துயரித்துப் பறந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானப் பரப்பில்
தனித்த மேகமொன்று
துணைதேடி அலைந்தது.
தூரத்திலிருந்து.
துணை பிரிந்த குயிலின் முகாரி
காற்றில் கேட்டது.

உன் மடி விட்டுத் தூங்குவதில்லை
உன் வாசற் படி தாண்டுவதில்லை
முடிவு செய்தேன்.

உன் கண்கள் முழுவதும்
மல்லிகை பூத்துச் சொரிந்தது.

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போயின போயின காலங்கள்

பெரும் மழை ஓய்ந்து
பேய்க் காற்று வீசுகிறது
ஆத்து வாழை இலைகளை
அள்ளிச் செல்கிறது காற்று
நீரில் படரும் தாமரை
ஆழத்தில் புதைகிறது

இரவு
சிறு மழைதானும் பெய்யவில்லை
மழையின் குறியீடாய்
ஒரு கோட்டு மின்னல்
ஒரு முழ இடி இல்லை வானில்
அதிகாலை
ஊசித் தூறல் விழுந்து
அடை மழையில் அமிழ்கிறது குளம்

குளத்தை கொத்திச் செல்கிறது மீன் கொத்தி
சுழிக்கும் நீரலைபோல்
போருக்கு முன் கரையில் கழிந்த காலங்கள்
நெஞ்சில் துயர் பிடித்துக் கவிகிறது

அன்றைய நாட்களில்
ஆத்து வாளை கும்பமாய்ப் பூத்து
ஊதாப்பூக்கள் சிரிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாரிவானம் இருண்டு
ஒரு பாட்டம் சரிந்தால் போதும்
குட்டி மாவலி குதிக்கும்
கொத்து மல்லி பூ உதிரும்
கொட்டைப்பாக்கான் கொடுகும்
குளமும் கரையுடைக்கும்

பக்கத்து ஊர்களில் இருந்து
குடைக்குள் நனைந்து
ஆட்கள் வருவார்கள்
தூண்டிலும் வலையுமாய்
கரையில் குந்திக் கொள்வோம்
படுவான் கரைப்பற்றைக்குள்
சூரியன் கரையும் கடைசிக் கணமும்
மீன்கள் கொத்தும்

பின்வந்த நாட்களில்
துப்பாக்கிகள் அதிரத் தொடங்கியதும்
குளத்தின் மட்டம் மெல்ல இறங்கிற்று
சுரிக்குள் மனித எலும்புகள் துருத்தி நின்று
பாசியின் நிறம் சிவப்பாய் வெளிறிற்று

குளத்தின் முகத்தில் படைமுகாம் முளைத்ததும்
ஆட்கள் வருவது புள்ளியாய்ச் சிறுத்து
காடையும் கீச்சானும் காடேகிப் பறந்தது

இப்போது
குளம் மழையில் மிதந்து
மீன்களும் குதிக்கிறது
காவலரணில் துப்பாக்கி நீண்டுள்ளது
கரையில் கொக்கும் காத்திருக்கிறது
யாரும் வருவதாயில்லை
பேய்க் காற்று வீச பெரும் மழை பொழிகிறது

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துயில் கொள்ளா இரவு

ஊரின்
கிழக்குப்பக்கம் கடல்
மேற்கில் வயல்வெளி
வயல்வெளிக்கப்பால்
ஆறும் நாணல்க் காடும்

அங்கிருந்து அல்லது
எங்கிருந்தோ
அவர்கள் வருவதாக
கிக்கிலி கத்திப்பறந்த
ஓர் இரவு

அழிஞ்சிப்பொத்தானை
காத்தான்குடிப் பள்ளியில்
படிந்த குருதியில்
உறைந்த காற்று
அச்சத்தைக் கூட்டியள்ளி
எல்லோர் முகத்திலும்
அறைந்து வீசிற்று.

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

தெருவோரம்
அறைச்சுவருள்
கட்டிலுக்கடியில்
பயம் சூழ்ந்து ஒடுங்கியது

பூனை பதுங்கி
அடுப்பங்கரை நுழைய
ராக்குருவி மெல்லக்கொடுகி
கூட்டுள்புக
பயம்
தொண்டை அடைக்கும்
திகில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருவெளியில்
பார்வையெறிந்து
விழித்துக் கிடந்தேன்
எல்லோரையும் போல

பனித்துகள் படிந்து
பூக்களும், இலைகளும்
துவண்டு களைத்து
அயர்ந்து தூங்கிற்று

இருள்விலகி
அதிகாலை அண்மித்தும்
தூக்கம் தொடாது
கண்கள் கனத்துப்பாரிக்க
மங்கிக்கரையும் வெள்ளிகளிடம்
வினவினேன்
அவர்கள் இரவும்
இப்படித்தான் கழியுமா?
ஜீப்வண்டி உருள்கையில்

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நரகில் தள்ளும் பாலைவனம்

அரிசி ஆலை தோற்கும்
பஸ்ஸின்
நடு ஆசனத்தின் வலதுபக்கம்
பட்டியில் கட்டிய ஆடுபோல
அடைக்கப்பட்டிருக்கிறேன்
அரை மணி இடை வெளியில்
புறப்படுவதான பஸ்
இரைந்து மூச்சிழுத்துக் கொண்டிருக்கிறது
இன்னும் நூறு மனிதக்கட்டிகளை
விழுங்கி ஏப்பம் விடும் முனைப்பில்.

தலை நகர் நோக்கிய பயணம்
காற்றில் மிதக்கும் சுகம்,
மலையடிவாரம் அடையும் மகிழ்வை
தந்ததில்லை ஒரு நாளும்

நகரும் ஒவ்வொரு அங்குலமும்
மிக நீளமானது
அடிக்கொரு படை முகாம்
அதையொட்டிய சோதனைச் சாவடி
புரியாத மொழிவேறு

பயணத்தில் கைகோர்க்கும்
ஆறுகள் இடையில் ஓடிவிடும்
சூரியன் பாதியில் இடறி விழும்
காட்டு மரங்களைக் கடைந்து வீசும்
வாசம்
மனித வெக்கையில் கரைந்து விடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரண்டோடும் பாதையை
துரத்திக்கொண்டிருக்கும் வாகனம்
அதன் கால்களுக்குள் சிக்கி
காற்று நசுங்கிக்கொண்டிருக்கும்
இரவின் கண்கள் உடைந்து கொண்டிருக்கும்
என்னைப்போல.

பாதையும், பயணமும்
ஓடிக்களைத்து
ஒரு புள்ளியில் சந்தித்து
நகரின் நெரிசலுக்குள் தள்ளி விடும்.

நீண்ட நெடும் பயணம்
நிறம்மாறிய நகரம்
இரண்டையும் நினைக்கையில்
எனக்குள்-
ஏழு பாலை வனம்பாதை விரிக்கிறது
ஏழு நரகம் ஒன்றாய்க் கதவு திறக்கிறது

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தி நேர மஞ்சள் வெயில்

வெயில் காய்ந்து மெலிந்து
படுவான்கரைப் பற்றைக்குள்
இறங்கிற்று
பூவரசம் பூக்களில் படிந்து
வைக்கோல் கற்றையில் தெறித்து
மெல்லென முதுகு சுடும்
அந்தி நேர மஞ்சள் வெயில்.

நவியான் குளக்கட்டில் நிற்கிறேன்
சைக்கிளைச் சாத்திவிட்டு

அரிசி ஆலை உமிமேட்டில்
எலும்பு கவ்வி நாயொன்று நகர்கிறது
தோணி மிதந்த தடங்களில்லை குளத்தில்
தூண்டிலிடும் கிழவனுமில்லை
மீன் கூடை கவிழ்ந்து கிடக்குது

நெடு நாட்கள் கழித்து
உப்பு மிளகாய் உறைப்புக்கறி
ருசித்து நாவூறி
குளத்து மீன் தேடி
கறகறக்கும் கறள் சைக்கிளில்
வியர்வை கசிய இழுத்து மிதித்து

சபித்து விட்டுப் போன
நவியான் குளக்கட்டுக்கு
மீண்டும் வந்துள்ளேன்.

குளம் நிரம்பி வழிந்து
மீன்கள் குதித்த பொழுதொன்றில்
காற்றுக் கந்துகளை விலத்தி
புத்தம்புது மோட்டார் சைக்கிளில்
விர்ரென்று விரைந்து
இவ்விடம் நிற்கையில்...

பொது நூலகம் மாநகர சபை கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடரி மயிர் பிடித்திழுத்து
தொண்டைக்கடியில் துவக்கு வைத்து
பறித்த
எனது மோட்டார் சைக்கிளின்
இலக்கம் 158-4628

வண்டில் மாட்டிடம்,
விறகு வெட்டிகளிடம்
கப்பம் பறிக்க முண்டி
அதிலேறிப் பறந்தனர்.
புகை மணம் மட்டும்
என் நாசிக்கான் அடைத்து...

பக்கத்தில் எருமைகள் இரண்டும்
அடைக்கிலக் குருவியும்
பார்த்திருக்க
எறித்ததும் இதே
அந்திநேர மஞ்சள் வெயில்.

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆமைப்பாலம்

கல்லோயா பாம்பு நதி
பள்ளக்காடு பொன்னன் வெளி
பசும் பொன் வயல் வெளி
பாய்ந்தோடித் தொங்கலாகும்
கிழக்குக்கரை கழியோடைப்பாலம்
கிழடு தட்டிக் கிடந்தது பலகாலம்.

பெருகி வந்த வெள்ளத்தில்
தற்காலிக (நிரந்தரமாகி விட்ட)
பலகைப்பாலமும்
சரிந்துபள்ளத்தில்

அரிசி, தேங்காய் அடைத்த லொறிகள்
சந்தைக்கும்,
அம்புலன்ஸ் வண்டிகள்
ஆஸ்பத்திரிக்கும்,
தலைசுற்றி மூக்கைத் தொட்டன

சைக்கிளும், சனங்களும்
தோணியேறிக் கரை தட்டின
தோணிக்காறன் உழைத்துக்கொண்டான்
ஒரு கூடைக் கெழுத்திக்கும்
நாலு கோர்வை விராலுக்கும்
கூடுதலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் இரண்டோ மூன்றோ
புரண்டும் விட்டது
குளவி கூடுகட்டுதல் போல
குப்பை மேடு நிரம்புதல் போல
திருத்தும் பணி மட்டும்
ஆமையாய் ஊருது

எனக்கொரு பிள்ளை பிறந்து
குமராகி
காதலித்து
கலியாணம் கட்டும்காலந்தான்
முடியுமாக்கும்

அதுவரை
அடைமழை காலத்தை
கடக்கும் வழியைத் தேடி
தொங்கிக் கொண்டிருக்கிறது பாலம்

0

(ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்தில் அமைக்கப்பட்டது. 1999 - 2006 வரையிலும் இதன் திருத்தப்பணி தொடர்கிறது. மாரிகால அவஸ்த்தையின் பதிவாக இது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்காட்டு நீர்பெருக்கிட்டு
கடதாசி ஆலை முகடு கிழித்து
ரெயில்வே ஸ்டேஷன் கதவு தகர்த்து
படகுத்துறையில் இறங்கிற்று
அது-
பூமிக்கடியில் தீயாய்ப் படிந்து
எமது தேசத்தின்
எல்லை பிளக்கும்
பொதுச்சுவர் எழும்பும்.

அந்நாள் தூரித்தும்
ஆர்ப்பாட்டமாக...
ஊர்வலமாக...
இடிமின்னலுக்கிடையிலும்
இருள்-
ஒளிர்ந்துகொண்டுதானிருக்கும்.

0

*கல்குடா - ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பிரதேசம்
**கபுறுஸ்தானம் - முஸ்லிம்களின் அடக்கஸ்தலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*கல்குடா

எரித்த சாம்பல்மேட்டின்
சூடு இன்னும் தணியவில்லை
எழுபதாம்,
எழுபத்தெட்டாம் முறையும்
கலவரமடைந்து, பீதிசூழ்ந்து
நேற்றுப் போலல்ல
மூன்று நாட்கள் நீடித்து
ஹர்த்தால், கடையடைப்பு
நிகழ்ந்திற்று.

சமாதானத்தின்கையெழுத்து
மயானம்வரை நீள்கிறது
இங்குதான்
இங்கிருந்துதான்.

அடக்கப்பட்டவர்களின்
**கபுறுஸ்த்தானில்
புற்கள் முளைப்பதற்கிடையில்
பூக்கள் மலர்வதற்கிடையில்
ஆட்டோவில்,
அறுவடை வயலில்
குதறப்பட்டவர்களின் ஈனவொலி
ஆற்றை நிறைத்து
காற்றைக் கிழித்து
கடலை மறித்திற்று.

மியான்குளத்தில்
பாலத்தின் அடியில்
ஈழக்கொடி கவிழ்ந்து
முந்தைய முகத்தை மீளக்காட்டிற்று
மனிதாபிமானத்தின் வேரையும்
சேற்றில் புதைத்திற்று.

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோடை வெயிலில் ஒரு கள்ளமழை

கொதித்துக் கொதித்து வழிகிறது
சூரியன்
கருகிக் கருகிச் சுருள்கிறது
பூக்கள்
செடிகொடிகள்

ஆகாயத்தில் அடுப்பு மூட்டி
சூரியனைக் காய்ச்சுவது யார்
அனலாய்த் தகிக்கிறது வெயில்
ஆவியாய்ப் பறக்கிறது ஆறுகள்.

ஒரு கோப்பைத் தண்ணீா
கொடுப்பாரின்றித் தவிக்கிறது குளம்
நீர்க் கரை தேடி ஓடிய ஓடைகள்
திரும்பவில்லை.

வெயிலைத் தள்ளியவர்கள்
தலையில் சுமந்து திரிந்தவர்கள்
பாரம்தாங்காமல்
வியர்த்துக் களைத்து
மரத்தின் கீழ் ஒதுங்குகின்றனர்
நிழலும் தீய்க்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையே!
இந்நேரம் நீ யெங்கு போனாய்?
முகிலாய்த் திரண்டு
கடலுக்குள் ஒழித்ததேன்
ஒரு பாட்டம் சரியேன்
பயிர் பச்சை குடித்து முழுக

இதோ!
துளிர்த்துப்பெய்கிறது மழை
கொதிக்கவைத்துச் சூடாக்குது வெயில்
மாலை
தேனீர் தயாரிக்கலாம்.

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாணம் புதைந்த நிலத்தில்...

மாடுகள் மேற்கில்
அசைபோட்டு நடந்தன
எங்கள் மாடுகள்

அந்திக்குச் சற்று அப்பால்
சரிந்து கிடக்குதுசூரியன்

மென்பச்சைக் கம்பளி போர்த்தி
நீண்டு படுக்குது
கதிர் பறிந்த வயல்வெளி
மூத்த வாப்பா முங்கிக் குளிக்கும்
வாய்க்கால்
இடந்து நகர்கிறது
அருகு இரண்டும் அறுகம் புற்கள்

மேய்ந்த மாடுகள்
விறைத்துப் பார்த்தேங்கி நின்றன
அப்பக்கமாக

புல்லும் புதரும் மூடுண்டு
காடு பத்தி அடர்ந்து
ஏக்கர் கணக்கில்
எங்கள் வயற்காணிகள்

பூங்குயிலின் பாடல்
காட்டிடை மறைந்து கேட்குது
மூத்தவாப்பா சிந்திய வியர்வை
சேற்றில் மண்டி மணக்குது.

17529



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றைகள் செருக்கி
வரம்பு கட்டி உழுத கழனிகள்
அவணக்கணக்கில்
நெல் விளைந்து சொரிந்த பூமி

மூடை, மூடையாய் ஏற்றி
அரிக்கன் லாம்பு ஒளிப்புகாரில்
வண்டில்கள் அணிவகுத்ததை
மாடுகள் மறக்கவில்லை

வேட்டுக்கள் பறிந்து
சுற்றி வளைக்கும் இரவுகளில்
அடைக்கலம் கொடுத்து
அவித்துக் கொட்டிய சோத்து மணிகள்
*அயத்துத்தான் போனது

எங்கள் மாட்டுச் சாணம்
ஆழப் புதைந்து
எங்கள் மண்வெட்டிகள்
கொத்திய நிலத்தில்
பாம்புகள் குடி கொண்டு

ஒற்றைப் போகமேனும்
விதைத்துப் பார்க்க முனைகிறோம்
ஒத்துக் கொண்டு கை குலுக்குது
கைகளில் ஈரம் காய முன்படமெடுத்துச் சீறுது

எங்கள் மாடுகள்
எங்கள் நிலத்தில்
மேய்வதை உழுவதை
எதுவரை தடுக்கும்
புடையன் பாம்புகள்.

0

17529

*அயத்து - மறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிழல் தேடும் சூரியன்


மாநகர சபை
கல்முனை
பொது நூலகம்


முன்னொரு காலத்தில்
எனதூரில்
கட்டிடங்கள் கர்ப்பமாவதில்லை
பட்டியாய்ப் பல்கிப் பெருகவில்லை
ஈன்று தள்ளியதெல்லாம்
மருதை,
வாகை, வம்மி

மூன்று தசாப்த்தம் முடிவதற்குள்
கல்,மண், கலவி உச்சத்தில்
பிறந்ததெல்லாம்
சுவர்கள்
கூரை உயர்ந்த வீடுகள்
கட்டிடக்காடுகள்.

வீடுகளில் முற்றமில்லை
முன்வாசலில்லை
கோடிப்பக்கம் கறிமுருங்கை
பூப்பதில்லை
காற்றள்ளிக் கொட்டும்
மாவில்லை, வேம்பில்லை
காகம் கரையக் கொப்பில்லை.

வீடுகள் காய்த்து
கிளைபரப்பி நெடிதுயர்கிறது
தென்னை தோற்று
தலை சவட்டிக் குனிகிறது

இரட்டை மாடிகள்
வளர்ந்து
வளர்ந்து
வான்முகடு கிழியும் விரைவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முந்திரி விரும்பிய கிளிகள்
கொட்டைப்பாக்கான் குருவிகள்
வனாந்தரங்களுக்கு
திசை பிரிந்து விட்டது

பட்டமரம் தேடிய மரங்கொத்தி
கருங்கல் தூண்களில்
அலகுடைக்கிறது

வாகை நான்கும்
வம்மி ஐந்தும்
கடைசிப் பூவையும், பிஞ்சையும் உதிர்த்து
ஒற்றையாய் நிற்கிறது
வேரில் துளி நீரும் காய்ந்து கொண்டிருக்கிறது
மரங்கள் வற்றிய ஊரில்
நிழல் தேடி அலைகிறது சூரியன்.

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்கடியில் வானம்

மரங்கள் சடைத்து
ஆறுகள் கிளைத்து
பாய்போல விரிந்து
பசுமையாய்க் கிடந்தது
தென்மூலை வானம்.

மான்கள் புணர்ந்து
சந்ததி பெருக்கி
தோட்டமும் சமைத்தது
சிங்கங்கள் குடிகொண்டதாக
சுவடுகளில்லை
அங்காங்கு ஓரிரு *அடில்கள்.

வானத்தின் வயிற்றுக் குடாவில்
வெள்ளைப் பறவைகள் வந்து
பாடிக்குளித்தது
முனையில் பூக்கும் மலர்கள்
சர்வதேசமும் மணம் பரப்பியது.
குண்டுகள் வெடிக்கத் தொடங்கியதும்
வெண்பறவைகள்
வேறு திசை நோக்கிப் பறந்தது
வானம் வெறுமையில் இருண்டது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தின் வனப்பை
மான்கள் மீளச் செழுப்பித்தது
வானத்தின் கரைகளை
கறையான்கள் அரித்து
அரச மரங்களை நட்டு
வேலி போட்டது.

நேற்று
வானம் காவி நிறத்தில் ஊறியிருந்ததாக
நரைத்த காகங்கள் கத்தியது
கூட்டம் கூடிக் கரைந்தது
சடங்கிற்கு
கழுதைகள் கனைத்தது
வானத்தில் சிறுதுண்டையும்
பெயர்க்க விடோமென்று
புழுதியும் கிளப்பின

நிலாத்துளிர்க்காத இரவுகளில்
புதைத்த புத்தர் சிலைகள்
வானத்தின் முன் வாசலில்
மினுங்குது
நாளை நடு வீட்டிலும் பளுங்கும்

இனி பூமிக்கடியில் வானம்
புகுந்து கொண்டால்த்தான்
மேய்ச்சல் தரையாவது மிஞ்சும்
மான்களுக்கு.

0

*அடில் - காலடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூத்து பின் உதிர்ந்து

சக்கடி... புக்கடி..
சக்கடி... புக்கடி...
கடைசித் தறியின் குரலையும்
நெருப்புத் தின்றது
கடைசிச் சேணியனை கடன் கவ்வியது

ஊரெல்லாம் ஒரு காலம்
காய்த்துப் பூத்துக் குலுங்கிய மரங்கள்
தறிகள்
திடீரென பட்டுப் போனது

சமுத்திரம் வற்றி
கப்பல்கள் கவிழ்ந்தது போல
தறிமாலை இழுத்து மூட
சிலந்தி வலை பின்னியது
பஞ்சம் படை கொண்டது
*சறுக்கால், நிலையடி அடுப்புக்கு இரையானது

கொள்ளிக்காரனை சில காலம் தேடவில்லை
**படஅலகும், இருப்பிடப்பலகையும்
மாதக்கணக்கில் எரித்தும்
மலையாய்க் குவிந்தது

அண்டைநாட்டுச் சரக்கு
சந்தையில் மீனாகி மலிந்ததும் உண்மைதான்
முற்றத்து மல்லிகையை நாமும் முகரவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சை துண்டாகக் கட்டியதும்
பிள்ளையின் ***கக்கா துடைக்கவும்
இறக்குமதிச் சாறன்தான்
பெருநாள்
சித்திரை, பொங்கல் பண்டிகை நாளிலும்
இடுப்பில் வெளிநாட்டழகி

நெசவுத்தொழில் ஆறாய்த் தூர்ந்தது
மேட்டு வட்டைக் காணியை உப்புத் தின்றது
கடலை மட்டும் ஆண்டவன் மூடவில்லை
பள்ளிக்கூடங்கள் திறந்து கிடப்பதால்
ஊரின் உசிர் இன்னும் உசும்புது

என்றாலும்
காற்றோடும், மழையோடும், மூச்சோடும்
கலந்து
சக்கடி... புக்கடி...
சக்கடி... புக்கடி...
தறிகள் பாடும் சப்தம்
கேட்க வேண்டும்
உயிர்த்து
கேட்க வேண்டும்

0

*சறுக்கால், நிலையடி - நெசவு உபகரணங்கள்
**படஅலகு, இருப்பிடப்பலகை - நெசவுத் தறியின் பாகங்கள்
***கக்கா - குழந்தையின் மலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடரும் ஆவேசத்துயரம்

பட்டிப்பூ பூக்காதுதிரும்
கபுறுஸ்தானில்
நடப்பட்டுள்ள *மீசான்கட்டையில்
குந்தியழும் பறவையின் பாடல்
ஒரு கடல்த் துயரம் சுமந்து மழையாகிறது
மழையாகி,

இருள் விக்கித்துக் கவிய
காத்தான்குடிப் பள்ளிவாசலில்
சரிக்கப்பட்டவர்களின்
காயாத குருதியில் கலந்து
நிறமாறுகிறது,
அழிஞ்சிப் பொத்தானை
ஏறாவூரில்
சதை கிழிக்கப்பட்ட குழந்தைகள்
கர்ப்பிணித்தாய்மார்கள்
கதறியழுத குரலை
வெறித்து நின்ற மரங்களை
முறித்துச் சாய்க்கிறது
மூதூரில்,வாழைச்சேனையில்
எரிக்கப்பட்டவர்களின்
சாம்பலில் படிந்து
கல்லாய் உறைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளைப் பிடுங்கி விட்டு
கால்கள் மட்டும் கொடுத்துத் துரத்திய
வடபுல முஸ்லீம்கள்
ஓலைக் குடிசைக்குள் கொட்டும் கண்ணீரை
உப்பளக் கரையில் நிறைத்து
கரையுடைக்கிறது

பாட்டன் சுவடுகள் ஆழப்புதைந்து
கலப்பையும், ட்ரக்டரும் பறிக்கப்பட்டு
வேர்களைப்பிடுங்கி வேலி அடைத்திருக்கும்
வயல் நிலங்களில் விழ்ந்து
ஆறாய்ப் பெருக்கெடுக்கிறது

மீண்டும் அது முகிலாய்த் திரண்டு
மழையாகிறது
இப்படியே...
இப்படியே...

0

*மீசான் கட்டை - முஸ்லிம்களின் அடக்கஸ்த்தலத்தில் அடையாளத்திற்கென புதைக்கப்படும் பலகை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ ஒளியிழந்த போது
ஒரு கோடி நட்சத்திரங்கள் உதிர்ந்தன,
உன் தோப்புக்குயில்கள்
குரலொடிந்தன.

கடலெனக்கிடந்தாய்
செல்வங்கள் கொட்டி
சமுத்திரமெனப் பரந்தாய்.
உன்னை நம்பிய
எங்கள் ஓடங்கள் கரை சேர்ந்தன
குடும்பக் குயில்கள் பாட்டிசைத்தன.

அதிகாலை போலவே
அன்றும் நீ
சிரித்துக் கொண்டுதான்
கடல்வாய்க்குள் போனாய்
கயல் மீன்கள் தேடி
திரும்பாத சேதி தெரியாமல்.

அந்திக் கருக்கல் வரைக்கும்
உன் குளத்துக் கொக்குகள்
ஒற்றைக்காலில் நின்றன
நீ
உயிருடன் திரும்புவாயென
ஆறு கடல் நீந்திக் கடந்தவன்
ஏழு மலை ஏறிக்குதித்தவன்
நீயென்பதால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சிவெயில் கொழுத்திய
மறுபொழுது
நீ மீட்க்கப்பட்டாய்
ஓடைக்குள்ளிருந்து
கொடுகிய கோழிக்குஞ்சு போல
உன் வெற்றுடல் கண்டு
செம்பூக்கள் கதறின
வண்ணாத்திப்பூச்சிகளும் பதறின

ஆழிப்பேரலைக்குள் அகப்பட்டு
மூச்சடங்கும் போதும்
கண்ணுக்குள் வைத்து
காக்கச் சொன்னாய்
கண்மணி மகளையல்லவா
மாமா!

0

('சுனாமி'யில் உயிர்நீத்த மாமா மன்சூர் வைத்தியர் நினைவாக)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவள் மூழ்கிய இரவுக் கவிதைகள் இரண்டு

01.
அலைகள் ஆர்ப்பரித்தடங்கும்
இன்றின் இரவு
நதியாய் நீளும் உன் நினைவுகளை
காற்றள்ளிச் சென்று
அடிவானில் புதைக்கிறது.
நட்சத்திரங்கள் அங்கு
பூத்துப் பின் உதிர்கிறது.

இந்த இரவென்ன
ஒரு கோடி நிலவல்ல
ஆழ் மனதில் உச்ச வலியெழுப்பி
விம்மிக் கரைகிறது
எனக்குள்

அமாவாசை
அடை மழை
முன்பனி இருளென
எத்தனை இரவுகள் நமக்குள் கரைந்திருக்கும்

முதன் முதலாய்
உன் மார்பில் முகம் புதைத்து
மெதுவாய், மெதுமெதுவாய்
கழுத்துவரை முன் நகர்ந்து
இதழ்கள் நனைத்த இரவொன்று
வெட்கப்பட்டு
உன் கூந்தல் காட்டுக்குள் மறைந்தது
பின் மீளவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணமிக்கு முந்திய
இன்னொரு இரவில்
உன் தேகமெங்கும் விரல் நெளிய
வெட்கிச் சிவந்து நீ தடுக்க
விரல் நுனியை நான் கடிக்க
ஆய்... எனச் சிணுங்கிய மெல்லொலி
இரவுப் பறவையின் தொண்டைக்குள் சிக்கி
பாடலாகி ஒலித்தது

இதுபோல எத்தனை இரவுகள்
நமக்குள் கரைந்திருக்கும்

மோகம் முத்திய விரகத்தில்
உருகி ஊத்துண்டு
பூனையாய்ப் பதுங்கி
பழைய வீட்டின் பின்பக்கம்
மூங்கில் கீற்றாய் நீயும்,
தீக்காற்றாய் நானும்
பற்றியெரிந்த இரவை
இலையுதிர்த்து மாவும்
கிளை விரித்து வாகையும்
மூடியல்லவா அணைத்தது.

பின்வந்ததும்
ஈற்றானதுமான பிறிதொரு இரவு
பிரிவின் பெருந்தீயை மூட்டியெரித்து
நீயழுத ஏழு கடலை
ஓர் மிடறில் குடித்து
மூவாயிரம் பகல்களுக்கப்பால்
வீழ்ந்தது.

இன்னும் அவ்விரவு விடியவில்லை...
விடியவேயில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02.

இரவின் அகன்ற விழிகள்
விரிந்து
விரிந்து
அறை முழுவதும் நிறைந்திருக்கிறது
காரிருள்

இருளின் வெளிச்சத்தை
பேரிறைக்கும்
அவள் கண்களை
அடர்ந்த கூந்தலை
மேனியின் கருமையை
அறையெங்கும் தேடுகின்றேன்.

இரவோடும்
இருளோடும்
அள்ளிச் சென்றுவிட்டாள்.

அமாவாசை நாளொன்றில்
அவிழ்த்துக்கிடந்த கூந்தலிலிருந்து
உதிர்ந்த ஒற்றை முடி ஒளிர்ந்து
கைகளுக்குள் சிக்கிக்கொள்கிறது.

அதன் ஈரம் இன்னும் உலரவில்லை

அவள் நினைவின் சுடராய்
ஆயிரம் இரவுகளுக்கும்
இனி நீண்டிருக்கப்போவது
இக்கூந்தல் முடி மட்டும், மட்டும், மட்டும்...

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அலைகளல்ல திமிங்கிலங்கள்

அதிகாலை நீலத்திரை கடலில் தெரிந்தது
தோணிகள் இழுத்த கோடுகளும் மிதந்தது
அணுவின் ஆயிரத்திலொரு மடங்கு கொந்தளிப்பும்
தெரிந்திருக்கவில்லையென்று
கடலைக் கரைத்துக் குடித்தவர்கள் சொன்னார்கள்
காற்று
மழை
சூரியன் மூன்றும் சொன்னது.

ஒரு மின்னல் இடைவெட்டும் கணம்தான்
எல்லாம்
எல்லாமே தலை கீழானது

பால்நுரை பூக்கும் அலைகள்
இவ் வன்மத்தைப் புரிந்திருக்காது
புரிந்திருக்கவே இருக்காது
ஆயிரத்து நூறு ஆண்டுகள் பசி கொண்டிருந்த
இராட்சதத் திமிங்கிலங்கள்தான்
இதைச் செய்திருக்கும்
அல்லது பேரலைகளாக உருமாறிப் புரண்டிருக்கும்

ஒன்று, இரண்டு, மூன்று, நான்கென
குமுறி எழுந்து
நிலக்கீழ் பாறைகள் அதிர்த்தி
சுருண்டன அலைகள்
இல்லை பாய்ந்தன திமிங்கிலங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

வேரோடும் வேரடி மண்ணோடும்
மரங்களைச் சாய்த்தன
வீடு தூக்கி வானில் கொழுவின
பாளம் பாளமாய் உடைத்து நொறுக்கின
மனித உடல்களை அரைத்துச் சப்பின
நீரைத் தரையில் கொப்பளித்து விட்டு
சாக் குரலால் நிறைந்தது கடல்

ஒரு மின்னல் இடைவெட்டும் கணம்தான்
எல்லாம்
பின் துளித் துளியாய் நிரம்பியது கடல்

பிரிவில், துயரில் உறைந்த மனிதர்கள்
வாழ்வெழுதி வருகின்றனர்

ஊரை விழுங்கிய திமிங்கிலங்கள்
கடலடியில் உறங்குகின்றன அவை அலைகளல்ல.

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதானம் பற்றியதான கனவு

கல்லடிப் பாலத்திற்கு கொஞ்சம் அப்பால்
முகத்துவாரத்தில் உனது வீட்டில்
பெருமரத்தின் கீழ்
உட்கார்ந்திருக்கிறோம்.
உன் கூந்தலில் சூடிய பூவாசமும்
என் கையிலிருக்கும் தேனீரின் ஆவியும்
ஒன்று கலக்கின்றது.

தூரத்தில் சந்தையில்
என் இனத்து வியாபாரிகளும்
உன் இனத்து சனங்களும்
ஒருவருள் ஒருவர் புகுந்து
நிரம்பி வழிகின்றனர்
அவர்கள் சிறகுகளை யாரும் வெட்டிவிடவில்லை
மேலே வானம் நீலமாய் வெழுத்திருக்கிறது.

படைமுகாமில் முன்னரங்குக் காவலரணில்
இரவு
குறட்டைவிட்டுத் தூங்கிய படைவீரன்
துப்பாக்கி முனையில் படிந்த பனியை
துடைத்துக்கொண்டிருக்கிறான்.
மணல் திட்டுக்களில்
புதித்து புதிதாய் பூக்கள் மலர்ந்திருக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்குள் அடர்ந்த மரங்களுக்கிடையில்
குண்டுகள் பொருத்திய மேலங்கியை
போராளிகள் கழற்றி வைத்திருக்கின்றனர்
வண்ணாத்திப் பூச்சிகள் அதில்
குந்திச் செல்கின்றன
பதுங்கு குழிக்குள் மண்புழுக்கள் நெழிகின்றன

நிலவு முழுசாய் எழுவதற்குள்
வெடிக்கும் வேட்டுக்கள்
சமாதானத்தை அகாலத்துள் இழுத்துச் செல்ல
முனைகின்றன

அது நிலைத்திருக்கப் பிரார்த்திக்கிறது பூக்கள்
நிலைகுலைய நினைக்கிறது நட்டுவக்காலிகள்

பறவைகளிடம்
அவளிடம்
பொதுமகன்
படைவீரன்
போராளி
எல்லோரிடமும்
நம்பிக்கை - அவநம்பிக்கை
இரண்டுக்கிடையிலும்
சமாதானம் பற்றியதான கனவு நீண்டு செல்கின்றது.
கல்லிடை சுழித்தோடும் மட்டுமா வாவிபோல...

0


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடல்குடித்த வீடு

கடலின் காலுக்குள்
என் சிறுவீடு குந்தியிருந்தது.
முற்றமும் இருந்தது
குளியலறை எல்லாமிருந்தது.

கூரைக்கு மேலாக
தென்னை கிளைவிரித்திருந்தது
அவரைக்கொடி பூத்திருந்தது
கொட்டைப்பாக்கான் கூடு வைத்திருந்தது.

குருவிகளோடு கூடவே
என் குஞ்சுகளும் குடியிருந்தது
பாய்விரித்துப் படுக்கவும்
வெள்ளி மணிகளைப் பொறுக்கவும்
முன்வாசல் வாய்த்ததுபோல
கதலி வாழைக் கன்றுகளும் கிணறுமிருந்தது.

கடல் எழுந்து தகர்க்கும் வரை
என் உழைப்பும்
வியர்வைச் சாறும் அதில் ஒட்டியிருந்தது.

ஒவ்வொரு கல் அடுக்கவும்
ஒருசாண் சுவர்முளைக்கவும்
அரேபியப் பாலைவனத்தில்
என் உதிரம் உறைந்த கதைகளை
அலைகள் எப்படி அறிந்திருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடல் உறுஞ்சிக்குடித்த
என் சிறு வீட்டில்
கதவுகளில்லை
ஜன்னல்களில்லை
கரப்பான் பூச்சிகளுமில்லை
அடித்தளம் மட்டும் அந்தரத்தில் தொங்குது.

நீரின் பொறிக்குள் சிக்கித் திணறிய
என் சிறு வீடு
நீந்திக் கரைசேர முனைகையில்
அதன் செட்டைகளை
அலைகள் முறித்ததாக காற்றுச் சொன்னது.
கடலடியில் மிதக்கும் என் படுக்கையறைக்குள்
அலைகளுக்கஞ்சி மீன்கள் பதுங்கியிருப்பதாக
சந்தைக்குத் தப்பிவந்த கணவாய் சொன்னது.

அலைகள் கடாசிவிட்டு
அகதிக் கிடங்கின் கூடாரத்துள் கிடந்து
கருவாடாய்க் காய்கிறேன்.
என் கண்ணிலும், கனவிலும்
முட்டைக்கோதாய் நொறுங்கிக் கிடக்கும்
என் வீட்டின் கதவுகளும்
ஜன்னல்களும்
இன்னும் திறந்தபடியே கிடக்கிறது.

புறாக்களே!
என்னதும்
உங்களதும் சிறுகூட்டை
நீங்களாவது
காலுக்குள் இடுக்கி வந்து
என் தோளில் வைத்திருக்கக்கூடாதா?

'ச்சே... போங்கள்'

0


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குழந்தைகள் கேட்காத அலைகளின் பாடல்

அலைகளின் முடிவுறாப் பாடல்
கரையெங்கும் கேட்கிறது...

நிலவு கூந்தல் விரித்து
வெள்ளிப் பூக்களை அள்ளி இறைக்கும்
இரவுகளில்
நண்டு துரத்திய சிறு பாதங்களை
கடற்காற்றில்
சிவப்பு
பச்சை
நீலப் பட்டங்கள்
பறக்கவிட்ட மென்கரங்களை
மணல் வீடு கட்டி, சிப்பி பொறுக்கிய
சிறுசுகளை
முழுத்தூக்கம் கலையாது
கண் கசக்கி விழிக்காத கண்மணிகளை

இரக்கமில்லாமல் அலைகள்
கொன்று குவித்த அன்று
சூரியன் கடலைச் சுட்டெரித்தது.
வானம் விம்மி வெடித்தது.
பொம்மைகளை கரங்களில் இடுக்கியபடி
தாயின் இடுப்பை இறுக்கியணைத்தபடி
இன்னும்
இறுதிவார்த்தை உச்சரித்த உதடுகள் விரிந்தபடி
கண்களில் ஒளி கசிந்தபடி
மரணம் அவர்களைக் கௌவிக்கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிட இடிபாடுகளுக்கிடையில்
மணல் திட்டுகளில்
அழுகிய அவர்களின் உடல்களின் நெடி
உப்புக் காற்றில் உறைந்தது.
பெருங்குரலெடுத்துப் பெய்த மழையில்
சிதிலமாய்க் கரைந்தோடியது.

மாண்ட தளிர்களை மண்மூட
உயிர் தப்பிய பிஞ்சொன்று
கதறி அழுது
கடலின் கழுத்தை நெரித்துப் புதைக்குமாறு
புலம்பிய குரல்
அண்டமெங்கும் எதிரொலிக்கிறது.
இன்னொன்று
கடலை மூடிவிடுமாறு கடிந்துகொள்வது
கூடாரத்துள்
தெருவில் தினம் கேட்கிறது.

வைத்தியர்கள் விழிபிதுங்கி முழிக்கின்றனர்...

மகாகாலமும் வியாபிக்கும்
வன்மத்தைப் புரிந்த கடல் மட்டும்
புன்னகை சிந்திச் சிரிக்கிறது.

சின்னக் கால்கள் நடந்த மணல் தரையில்
இப்போது
அடம்பன்கொடி படர்கிறது.
அறுகம்புல் முளைக்கிறது

குழந்தைகள் காதுகளைப் பொத்திக்கொள்ள,
அலைகளின் முடிவுறாப் பாடல்
கரையெங்கும் கேட்கிறது...

0

பொது நூலகம் மாநகர சபை கல்முனை

17529



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடி படர்ந்த காலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்த்து மடலோடு
பெருநாளை
வழியனுப்பி விடவேண்டாம்
உயிர் எரிகிறது
ஊர்வாங்க!

ஏகாந்த வெளியில்
நிற்கும் ஒற்றை ரோஜாவின்
ஏக்கம்
புரியாத உங்களுக்கு?

பூக்களின் இதழ்களை
புட்டு வந்து படைக்கப்பட்டது
பெண்மனம் என்பது
தெரியாதா உங்களுக்கு?

கனவுகளை நிரப்பிவரும்
கடிதங்களாலும்
அடித்து விட்டு
சில நிமிடங்களில்
அறுந்துபோகும்
தொலைபேசி மணியாலும்
காதல் திருப்தி காணுமா?

இரவில் எறிக்கும்
நிலவில் உன் முகம் காண்கிறேன்
என்கிற
ஆறுதல் வார்த்தைகளை
சுமந்தெனக்கு
மடலிட வேண்டாம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌர்ணமித் திங்களில்கூட
பொங்கியெழும்
அலையின் வேகம்
அறியாத கடலைப்போல
தலைநகரிலேயே
தரித்து விடுகிறீர்கள்!

உங்கள் நிலா
ஊரில் காய்கிறது!
வருடத்தின் இறுதியில் வருகின்ற
இந்த பெருநாளுக்கேனும்
ஊர் வாங்க
உங்கள்முகம் காணவேண்டும்!

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு ஒழுங்கை

வண்டிலொன்று
உருண்டு போகும்
அகலம்
மொத்த நீளம்
முப்பதடி
முதல்பத்தடிக்கு
போனதேர்தல்
நெருங்கும் போது
போட்டு இன்னும்
கலைக்கப்படாத
கிறவல் களி
மிச்சநீளம்
முழுவதும்
தடித்ததும் வெடித்ததுமான
பள்ளக் குழிகள்
இவைதான்
தவளைகளின்
மாரிகால
தங்குமிடம்
பாசிக்குடும்பதின்
படுக்கையறை
அருகு
இரண்டுபக்கமும்
பத்துப் பன்னிரெண்டு
பட்டை வெடித்த
மஞ்சமுணாமரங்கள்
அவற்றின்
அடியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயலவர்கள்
அள்ளி வீசிய
குப்பை கூழங்கள்
அந்திகளில் பள்ளி விட்டு வரும்
வெள்ளையும்,சொள்ளையுமான
பிள்ளைகளுக்கு
கண்ணடிப்பதற்காக
காவலிப் பொடியன்கள்
காத்திருப்பதும்
இதில் தான்
மாரிகாலத்தில்
வெள்ளம்
பெருக்கெடுப்பதும்
இதில்தான்
ஒரு காலத்தில்
நானும் அவளும்
கைகோர்த்துத் திரிந்த தடங்கள்
இன்னும் இதில்
தெரிகிறது
காதல்தான்
எப்போதோ
காணாமல் போயிற்று.

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெய்யக் கண்ணீர்

குழித்தறிப்பட்டுச்சோமன்
என் குழந்தைப்பருவக் கைத்தொழில்
கைத்தறி நெசவுக்கு ஈடாமோ
வள்ளுவன் வாக்கின் நெறி இஃதாமோ

பஞ்சினைக்கண்டவன்
பசையினை போட்டனன்
பாவை வார்த்தனன்
தறிகொண்டு சாறன் போட்டவனை
மிஞ்சாமல் பஞ்சம்
துரத்துதல் தகுமோ

காலை வெளுக்கப்போனான்
ஒரு வேளைப்பசிக்கு
உழைக்கப்போனான்
கச்சை கிழிக்கப்போனான்
ஆடை தந்து மானம் காத்தனன்
அவனை
எல்லையற்ற தொல்லைகள்
தொடர்வதும் நியாயமோ

நாடாவை, சறுக்காலை,கட்டையை
படஅலகை, மிதிவைக்கம்புகளை
தொட்டுப்பார்த்தவன்
மாடாகி உழைத்தவன்
மண்ணில் ஓடாய்த்தேய்வதும் நியாயமோ
*அச்சுவிழுதும், பலகைக்கூடும்
இனி இருப்பிடப்பலகையும் எதற்காமோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் தொழிலை சீர்தூக்கிப் பார்க்கினும்
நெய்யும் தொழிலுக்கு நிகரில்லையென்று
சொன்ன இந்தியனே!
தாராளப் பொருளாதாரக் கொள்கையால்
நீ
சாறன்களை இறக்குவதால்
பாழாய்ப்போன நெசவுக்கு
விடிவு எங்காமோ

உப்புச்சாரி, வேட்டி, சால்வை
பிஜாமாச்சாறன்
செக்கில்லாமல் விற்றபோது
வயிறுபுடைக்க உண்டோம்
வாழ்வதுவென்று கண்டோம்

கிப்ஸ் சனியன் வந்தபின்
இட்டமுதலெல்லாம் அழிஞ்சி
பட்டமரத்தறியை
பத்தவைக்கவேண்டிய துயரம்
எம் நிலமை யாரறிவார்?

0

* அச்சு விழுது, பலகைக் கூடு - தறியின் பாகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடலோரம்

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

உசிரப்பணயம் வெச்சி
பசியோட படகேறிப்போறமச்சான்
வங்க்கடல் பொங்கிப் பேரலையடிக்குது
கனத்தமழையோட பலத்த புயலென
சனத்தோட கத கேட்க சத நடுங்குது
மப்பும் மந்தாரமாய் இப்பகடல்
மனசு கேட்குதில்ல

கட்டாப்பாரை, சூரை, கருமுரல் தேடி
கனதூரம் போகாதீங்க
பட்டகடன் அடச்சி இட்டமுதல் காக்க
குட்டியாய்யொரு கும்பிளாப்பாட்டோட
குடிசை வந்து சேருங்க
சுட்ட கருவாடோடும் சோறு தின்னலாம்
குட்டி குராலுக்கு கூழைக் கொடுக்கலாம்
மப்பும்மந்தரமாய் இப்ப கடல்
மனசு கேக்குதில்ல!

மாரிமழை ஓஞ்சி ஏரிகுளம் வத்த
கீரி,வாளை,நெத்தலி பாடு மடிவெடிக்கும்
கரை வலைக்கும், மாயா வலைக்கும்
காலம் வர, கை நிறையக் காசு வரும்
மப்பும் மந்தாரமாய் இப்ப கடல்
மனசு கேக்குதில்ல!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொது நூலகம்
மாநகர சபை
கல்முனை

கடல் கொந்தளிக்கும், வாடைக்காலத்திலும்
கஞ்சா அடிச்சு மல்லாக்கப் படுத்ததில்லை நீங்க
கச்சான், கடலை,சோளம் வித்தேனும்
சோறு தருவீங்க
மாரிமழையும் கோர இடியும்
கடல் தொழிலுக்கு ஏற்றதில்ல
பசிபோக்க படைச்சவன் படியளப்பான்
மப்பும் மந்தாரமாய் இப்ப கடல்
மனசு கேக்குதில்ல!

17529

0



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அலறி-
தனிமனித உணர்வுகளில் மட்டும்
கரைந்துவிடவில்லை.
தன் சமூகத்தின் நாவுமாக இருக்கிறார்.

சட்டப்பட்டதாரி.
தற்போது,
பொதுச் சுகாதாரப் பரிசோதகராகப்
பணியாற்றுகிறார்.

MESRO

designed by:

ISBN: 955-99400-0-9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org